**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.11/2022 PW .8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :நடராஜன் | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | :சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.05.2026

---

**(எதிரி ஆஜர்)**

**(சாட்சியத்தின் சாட்சியம் காணொலி மூலம் விசாரிக்கப்பட்டது)**

<u>07.05.2026 முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் எஸ்எஸ் கோட்டை காவல் நிலையித்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் பீட்டர் அலங்கார தம்புராஜ் அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.5/21 இதச பிரிவுகள் 341, 354, 323 மற்றும் 4 of TNPWH Act வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சிகள் சார்பு ஆய்வாளர் பீட்டர் அலங்கார தம்புராஜ் அவர்களிடம் கூறிய விவரங்களையே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் 20.09.2021ம் தேதி வழக்கின் எதிரி ரமேஷ் என்பவரை காலை 10 மணியளவில் எருமைப்பட்டி விலக்கு பேருந்து நிறுத்தின் அருகே வைத்து கைதுசெய்து சாட்சிகள் கண்ணன், ஐயனார் ஆகியோர் முன்னிலையில் விசாரித்த போது எதிரி எவ்வித துன்புறுத்தலோ, அச்சுறுத்துலோ இன்றி தாமாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். (மேற்படி ஒப்பபுதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி இல்லை என்பதால் அதனை குறியீடு செய்யவில்லை.) பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் கண்ணன், ஐயனார், மனுரசீது வழங்கிய தலைமை காவலர் அழகு சுந்தரம் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு

விசாரணையை முடித்து எதிரி மீது வழக்கு பதிவு செய்த பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

2. வழக்கின் கோப்பினை எந்த தேதியில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 07.07.2021 அன்று எடுத்துக்கொண்டேன். 20.09.2021ம் தேதி அன்று சாட்சிகளை விசாரித்தேன். நீதிமன்ற காவல் அடைப்பு அறிக்கையில் மேற்படி விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 20.09.2021ம் தேதி எதிரியை எருமைப்பட்டி விலக்கில் வைத்து கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம்பெற்ற போது சான்று பொருட்கள் கைப்பற்றினோ என்றால் இல்லை. அசா.1 யை மறுவாக்குமூலம் செய்த போது கிழிந்த துணிகள், ஆவணங்களை கைப்பற்றினோ என்றால் இல்லை. நான் வழக்கு கோப்பினை எடுத்துக் கொண்ட போது சம்பவ இடம் சென்று சம்பவ சாட்சிகளை விசாரித்தேனா என்றால் இல்லை. சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் வழக்கு கோப்பினை சொன்ன தேதியில் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் எதிரியை சொன்ன நேரத்தில்சொன்ன இடத்தில் கைது செய்யவிலலை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று சம்பவ சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் தயார் செய்து வைக்கப்ட்ட ஆவணங்களை கையொப்பம் மட்டும் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.